சாதிஒழிப்புபேச்சு வலுக்கிறது!

Phone No. 4502 Regd. No. M. 5458

மாலை மணி

ஆசிரியர்: C.N. அண்ணாதுரை M.A. MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1] சென்னை (23—9—49) வெளியூர் (24—9—49) [இதழ் 45

இலட்சிய வெற்றி - நமது பூரிப்பு!

துவேஷம், தர்மோபதேசமாகிறது!

நம்மை நிந்தித்தவர்கள் தோத்திரம் செய்து நிற்கும் காட்சி!

அன்று காமராஜர் - இன்று பூவராகன்!

"ஜாதிகளில்லையடி பாப்பா' என்று பாரதியார் கூறி இருப்பதை ஒவ்வொரு குழந்தையும் உணரும்படி நாம் பள்ளிகளில் செய்ய வேண்டும்."

"இந்த ஜாதி என்ற குஷ்ட நோய் நம் நாட்டை விட்டுத் தொலைய வேண்டும்."

"ஜனன மரண ரிஜிஸ்டரில் ஜாதி எழுதப்படும் வழக்கம் கைவிடப்பட வேண்டும்."

"இந்த முத்திரை இல்லாமல் போனால் எவ்வளவோ நாம் முன்னேற முடியும். இதை சர்க்கார் கவனிக்க வேண்டும்."

"நாம் ஒருவரை ஒருவர் பிரிக்கும் முறையில் ஜாதியை ஸ்திரப் படுத்துகிறோம்."—தஞ்சை பூவராக அய்யங்கார்

'ஜாதி' என்ற ஒரு சொல்லையே தங்கள் தாய் மொழியில் கொண்டில்லாத அளவிற்கு, சமத்துவ — சமரச — வாழ்வு வாழ்ந்து வந்திருந்தனர் தமிழ் நாட்டவர்—தென்னாட்டவர். பிறப்பினாலேயே பேதம் கற்பித்துத், தங்களுக்குத் தலைமை இடத்தைத் தேடிக் கொண்டவர்கள் தர்பாரூர்கள் தான் என்பது வரலாறு கூறும் மறுக்க முடியாத உண்மை. பஞ்சாங்கத்தாரின் சனாதன சிருஷ்டி, நாமும் மக்கள் தான் என்ற உயர்ந்த எண்ணத்தை எந்த ஒரு மனிதனிடத்திலும் தோன்ற விடாமல் செய்து விட்டது. மனிதனை மனிதன் மனமார நம்பி-நேசிக்கும்—கட்டாயம் இருந்து தீர வேண்டிய பண்பாடு, மக்களிடை நாசமாகப்போய்விட்டது. மனிதனை மனிதன் வெறுக்கவும், மனிதனைமனிதன் பகைக்கவுமான நாசகாரியத்தில் ஒவ்வொருவரும் போட்டியிடலாயினர். 'ஆண்டவனே' நேராக வந்து ஓதியமறை, வேதாகம ஆதாரம், பழக்க வழக்க பக்கபலம், முதலியன இதற்கு இன்று வரையில் அரணாக அமைந்து வருகின்றன.

இதனால் நாடு கண்ட பலன் என்ன? மக்கள் பெற்ற இலாபம் என்ன?

நாடு குட்டிச் சுவராயிற்று! படை யெடுத்து வந்தவர்களுக்கெல்லாம் வரவேற்பு கூறும் நிலை பெற்றது! மக்கள் மாக்களாயினர்! வன்விலங்குகள் போல் வாழ்ந்தனர் வாழ்ந்து வருகின்றனர்!

இந்த நிலை மாறித்தான் ஆகவேண்டும், மக்கள் சமுதாயம் முன்னேற்றம் பெற வேண்டுமானால். மக்கள் பணி புரிவதாகச் சொல்லிக்கொள்கிறவர்கள், முக்கியமாக முதல் முதலில் மேற்கொள்ள வேண்டிய பணி இது தான். நாம் நெடுங்காலமாக, சனாதன [illegible]யில், வருணாஸ்ரம ஒழிப்புப் பணியில், மும்முரமாக ஈடுப்பட்டு வருகிறோம். நமது இந்த உழைப்பு எள்ளி நகையாடப் பட்டது, ஜாதியால் சகல வசதிகளும் பெற்றுவந்த சழக்கர்களால். மக்களுக்குள் துவேஷ உணர்ச்சியைத் தூண்டுகிறோம் என்று தூற்றப்பட்டோம், தொந்[illegible] பெருத்தவர்களால். வருணாஸ்ரம கோட்பாடே நமது கேடுகளுக் கெல்லாம் அடிப்படை என்று நாம், நுணுகி நுணுகி ஆராய்ந்து கண்ட முடிவை, நயவஞ்சகர்கள் நையாண்டி செய்து, நம்மை நசுக்க நாடாளுவோருக்குத் தூபமிட்டனர். நாம், இந்த நற்பணி புரிந்ததற்காக, அரசியலாரின் பொருத்தமற்றச் சட்டங்களுக்கு பலியானோம். நமது பேச்சுரிமை தடுக்கப்பட்டது; எழுத்துரிமை பறிக்கப்பட்டது; கோல்கொண்ட குணக்கேடர்களால். அன்று நாம் கூறினதை, ஆளவந்தார்களின் பொல்லாக் கோபத்துக்கிடையே இன்றும் நாம் கூறி வருவதை, அன்று நம்மை 'ஜாதித்துவேஷிகள்' என்று நிந்தித்து நிந்தித்து நாத்தழும்பேறியவர்கள், நம்மை நச்சு நாவினர் என்று பழித்துப் பேசிய பெருந்தகையாளர்கள், இன்று-வெகு தீவிரமாகக்-கிளம்பி இருக்கிறார்கள், நாம் என்றோ துவங்கிச்செயலாற்றி வரும் பணியை புரிய! நாம் மகிழ்ச்சி அடைகிறோம். நம்மை நையாண்டி செய்தத் திருக்கூட்டத்தினரே, நாம் புரிந்து வந்த-புரிந்து வரும் பணியினை மேற்கொண்டிருப்பதைக் கண்டு. இத்துறையில் நாம் கொண்டிருந்த கோட்பாடு உண்மையானது என்றும், அதற்கு இன்றியமையாதத் தேவை இருக்கிறது என்பதை, இவ்வளவு காலத்திற்குப் பிறகாவது எதிர்த்து வந்தவர்கள் ஏற்றுக்கொள்ளும் நிலை ஏற்பட்டதே என்றும், நாம்நினைக்கும் தோறும், நமக்கு மகிழ்ச்சி பிறக்காமல் இருக்க முடியுமா? நம்மை எதிர்த்தவர்கள், நமது பிரசாரத்தையே செய்ய முன் வரும் பொழுது—காலங் கடந்ததாக இருந்தாலும்-நாம் இதுவரையில் நேர்மையானது என்று கொண்டிருந்த கோட்பாடு வெற்றி பெறுகிறது—நமது கோட்பாட்டிற்கு அறநெறி அரண்செய்கிறது-என்ற முடிவைத்தானே நாம் கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். நிற்க,

தமிழ்நாடு காங்கிரசின் தலைவர் சில நாட்களுக்கு முன், ஜாதி தொலைய வேண்டும் என்று கர்ஜனைபுரிந்தார். கலப்புமணப் பெருக்கத்தால் தான் ஜாதி அழியும் என்று சங்கநாதம்புரிந்தார்! நமது உழைப்பு எற்கெனவே இல்லாமல் இருந்திருந்தால், காமராஜர் கர்ஜனையும் சங்கநாதமும் புரிந்திருக்க முடியுமா? வைதீகபுரி, அவரை, இதற்குள் வாட்டி வதைத்திருக்குமே! மற்றோர் திருச்செங்கோடையும் திருப்பரங்குன்றத்தையுமல்லவா எதிர்நோக்கி இருக்கவேண்டும்!

ஜாதி ஒழிப்பு இலட்சியத்தைப் பொறுத்தவரையில், காமராஜர் நமது இலட்சிய பூமியில் கால் வைப்பதும், மற்றவற்றில் கோடை வெய்யிலில் கால் வைக்க அஞ்சுவது போல அச்சங்கொள்வது மாக, இன்று காமராஜர் இருந்து வருகிறார். இருந்தாலும், இன்னும் சில காலம் சென்ற பின்னராவது, நமது போக்கின் நேர்மையை, அவர் புரிந்து கொள்வார் என்ற திட நம்பிக்கை நமக்கு உண்டு. ஏன்? ஜாதி ஒழிப்புப் பணியில், அவர் நமது கட்சியின் உறுப்பினராக ஆகாமலே—ஈடுபட முனைந்திருப்பதிலிருந்தே, நாம் அந்த நம்பிக்கைக் கொள்ள இடமிருக்கிறது அல்லவா?

ஜாதி ஒழிப்பைக் காமராஜர் ஏற்றுக்கொண்டது ஒரு பக்கம் இருக்க, தஞ்சை பூவராக அய்யங்கார் வேறு புறப்படுகிறார், கொட்டு முழக்கோடு, ஜாதி அழிப்புப் போர்க்களத்திற்கு! குடந்தையில் நிகழ்ந்த பாரதி விழாவில் தோழர் பூவராகன், ஜாதியின் கேட்டினைக் குறித்துச் சில கூறியுள்ளார். நமது இலட்சியத்திற்கு, எங்கெந்த இடத்திலிருந்து ஆதாவு கிளம்புகிறது பார்த்தீர்களா?

"இந்த ஜாதி என்ற குஷ்ட நோய் நம் நாட்டை விட்டுத் தொலைய வேண்டும்" நாம் அல்ல, இவ்வாறு கூறினது—தஞ்சை பூவராக அய்யங்கார்! ஜாதி ஒரு நோய்—அதுவும்

[தொடர்ச்சி 2-ம் பக்கம் பார்க்க]

சினிமா பார்ப்பதை விட பாகவதம்கேட்பதுமேலா?

தமிழ்நாட்டில் பாகவதமும் சினிமாவும் ஒன்றுதான்!

அறிவூட்டும் சினிமாப் படங்கள் தேவை

"பணத்தையும், காலத்தையும் சினிமாவில் செலவழிப்பதைக் காட்டிலும் பழைய பாகவதங்களைக் கேட்டாலும் பிரயோசனமுண்டு" என்று சர். சி. வி. இராமன் கோவையில் பேசுகையில் குறிப்பிட்டார். இவ்வாறு கூறக்காரணம், சினிமாக்களில் உண்மையான உலகம் படம் பிடித்துக் காட்டப் படுவதற்குப் பதிலாக, மனித இந்திரியங்களின் கேவலமான இசைகளைக் கிளப்பக்கூடிய படங்களேகாட்டப்படுகின்றன என்பதே.

உண்மைதான். தமிழ் நாட்டில் சினிமாப் படம் எடுக்க வந்த முதலாளிகள், கலை, நாகரிகம் ஒழுக்கம் முதலியவற்றைப் பரப்ப வேண்டுமென்ற கருத்துடன் படப்பிடிப்புத் தொழிலுக்கு வாவில்லை என்பது அவர்கள்எடுத்து வெளியிலனுப்பிய படங்கள் மூலம் நன்கு தெரிகிறது. ஆனால் அப்படி வெளிவந்த படங்களைத்தடைசெய்யும் அறிவும் அரசாங்கத்துக்கு ஏற்படவில்லை. எனவே அரசாங்கமும் பட முதலாளிகளும் ஒன்று கூடியே மனித இந்திரிய உணர்ச்சியைக் கிளப்பும் படங்கள் நாட்டில் நடமாட வைத்தார்கள் என்பதில் தவறில்லை.

எவ்வளவு சிற்றின்ப வேட்கையைக் கிளப்பி விடும் படமானாலும் அதற்கு மத முலாம் பூசி விட்டால் அப்படம் தெய்வீகம் பெற்று விடுகிறது. சிற்றின்ப உணர்ச்சிகளைக் கிளப்பிவிடும் மகா ஆபாசக் கதைகள் புராணங்களாக நம் நாட்டில் மலிந்து நடமாடுகின்றன. பட முதலாளிகளுடைய இச்சையைத் தீர்த்துவைக்க, புராணக் கதைகள் நன்கு பயன்படுகின்றன. எனவே தான் புராணக் கதை என்னும் மெருகுடன், மதமுலாம் பூசப்பட்ட ஆபாசக் கதைகள் இந்த நாட்டில் அரசாங்க ஆதரவுடன் நடமாடி வருகின்றன.

இந்நிலையில் உண்மையான உலகம் படம்பிடித்துக் காட்டப்படுவது எப்படி முடியும்? ஆனால், இவ்வாபாச முறைக்குப் பரிகாரம் கூறவந்த ஸர். சி. வி. இராமன், பாகவதக்கதை கேட்பது சினிமா பார்ப்பதை விட மேலென்கிறார். அதனுடன் ஸ்தல யாத்திரை செய்து கோயில்களைத் தரிசித்து விட்டு வருவது இன்னும் மேலென்று அவர் கூறியிருக்கலாம். இவர்கூற்று, கனவில் காய்வதைவிடக் கடுந்தீயில் விழுவது மேல் என்பதை ஒக்கும்.

சினிமா பார்ப்பதால் இந்திரிய உணர்ச்சிகள்கிளப்பப்படுகிறது என்பது இராமனின் கருத்து. பாகவதக் கதைகள் கேட்டால் மட்டும், ஆன்ம உயர்வு ஏற்பட்டு விடுமோ- அக்கதைகள் இன்னும் ஆபாசச் சிற்றின்ப உணர்ச்சியையே பெருக்குகின்றன. அவ்வாறே தான் கோயில்களிலும். கோபுரங்களிலும் மண்டபத் தூண்களிலும் சிற்றின்ப உணர்ச்சியைக் கிளப்பி விடக் கூடிய காட்சிகளை என்றும் அழியாதபடி சிற்பிகள் செதுக்கி வைத்திருப்பது தானே மக்களின் கண்களுக்குப் புலனாகின்றன.

எனவே, நாட்டில் ஆபாச உணர்ச்சி கிளம்பாமல் தடுக்க, புராணங்கள்,பாகவதங்கள் கோயில்கள் முதலியவை அறவே கூடாது என்று ஸர். சி. வி. இராமன் கூறியிருந்தால், பாராட்டக் கூடியதாயிருந்திருக்கும். சினிமாவில் அறிவூட்டும் உயர்ந்த ரகப்படங்கள் வரவேண்டுமென்று கூறி அரசாங்கம் அதில் கவனம் செலுத்த வேண்டுமென்றால் அர்த்தமுடையதாயிருந்திருக்கும்.

அங்ஙனமின்றி, சினிமா பார்ப்பதே தவறென்று கூறிவிட்டு, அதையும் விடத் தவறான காரியத்தைச் செய்யச் சொன்னால், இவர் போக்கு விந்தையிலும் விந்தையானதாகவன்றோ இருக்கிறது!

மத்திய அரசாங்கத்தின் கருணை

ஒரு கால்வருட காலத்திற்குச் சென்னை மாகாணத்தில் உள்ள மக்களுக்கு 21,000 டன் சர்க்கரை தேவைப்படுகிறது. அதாவது மாதம் ஒன்றுக்கு நம் மாகாணவாசிகள் 7000டன் சர்க்கரையைப் பயன்படுத்துகிறார்கள். இந்நிலையில் மத்திய அரசாங்கம் நமக்கென்று 3மாதத்திற்கும் சேர்த்து 5000டன் ஒதுக்கி வைத்திருக்கிறது. சென்னை அரசாங்கம் 10,000டன்களாவது தர வேண்டுமென்று கேட்கிறது.

மத்திய அரசாங்கம் நம் மாகாணத்தின் மீது வைத்திருக்கும் பெருங்கருணைக்கு இது ஒரு சான்று!

மாலை மணி

சென்னை 23—9—49 வெள்ளிக்கிழமை

நல்வாழ்த்தும் நன்றியும்

கிளர்ச்சிக்காரர்களுக்கு இது போதுமான வெற்றியேயாகும். என்னவென்றால் அவர்களுக்கும் ஒரு கழகம் இருக்கிறதென்பதும், அதிலும் ஒரு பெரிய குழு என்று காட்டக்கூடிய அளவுக்குப்பேர் வழிகள் காட்டமுடிந்தது என்பதும் அவர்களுக்கு ஆகவும் சில பத்திரிகைகள் நடக்கின்றன என்பதுமாகும். பல இடங்களில் அவர்களை ஆதரிக்கும் மக்கள் இருக்கிறார்கள் என்பதுமாகும். ஒழுங்காக உண்மையாக வேலை செய்பவர்களுக்கு இது போதும். இதிலிருந்து இனி எவ்வளவோ அவர்கள் செய்துகொள்ளலாம்''

இந்த நலவாழ்த்துடன், துவக்கப்பட்டிருக்கிறது திராவிட முன்னேற்றக் கழகம்—வாழ்த்துதலும் விளக்கமறியாத இடத்திலிருந்து கிடைத்ததல்ல, மக்கள் மனப்பாங்கை நன்கு உணர்ந்துள்ள பெரியாரின் ஆதீன ஏடாம் விடுதலையிடமிருந்து வெளிவந்திருக்கிறது.

திராவிடர் கழகத்தின் முன்னணியினர் பெரும்பாலோர், விலகி வேறு அமைப்பை ஏற்படுத்திக்கொண்டது கண்டு, விடுதலை, ஒரு நீண்ட பெருமூச்சு—பிறகு ஓர் இலேசான புன்னகை — மீண்டும் ஓர் நீண்ட பெருமூச்சு — இடையிடையே கோபக்குறிகள், காட்டிடும் போக்கிலுள்ள முதியவர் போலாகி, அப்பாடா! தொலைந்ததா சனியன்! என்று துவக்கி, அவர்களுக்கும் வாய்ப்பு இருக்கிறது என்று கூறி, என்ன செய்கிறார்கள் பார்ப்போம் என்று புன்னகையுடன் அறைகூவி, இனி நம் வேலை சுலபமாகிவிட்டது என்று தைரியம் உரைத்து, இவ்வாறாக, பலவித உணர்ச்சிகளை, ஒரே தலையங்கத்திலே, வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறது. இந்த மனப்போக்கு நாம் புரிந்து கொள்ளக்கூடியதுதான் — உண்மையிலேயே இந்தச் சம்பவம், எவர் மனதிலும், பல்வேறு வகையான, உணர்ச்சிகளைக் கிளப்பிவிடக் கூடியதுதான். சாதாரணச் சம்பவமல்ல—பற்றும் பாசமும் கொண்டு பலகாலமாகக் கூட்டுக்குடும்பமாக வாழ்ந்து வந்தவர்கள், பிரிந்துபோவது என்றால், நெஞ்சு நெகிழாமலா இருக்கும்!

''நான் அழைத்தால்கண்ணை மூடிக்கொண்டு பின்பற்றுவார்கள், என் இயக்கப் பிள்ளைகள்'' என்று அகமும் முகமும் மலர, அவர் கூறவும், ''ஆமாம், அவருடன் நின்று, அவர் வழி சென்று, அவர் அருமையினை நாட்டுக்குரைத்து, அதன் பயனாக, நாட்டவரின் நல வாழ்வை அமைப்பதே எமது நோக்கம்'' என்று இயக்கத்தின் பல்லாயிரவர் கூறவும், இது கண்டு இப்படி ஒரு குடும்பம் இருக்கிறதே என்று மாற்றுக்கட்சியினர் பொருமைப்படவும், வைதீகர்கள் வேதனைப்படவும், ஆதிக்கக்காரர்கள் அச்சப்படவுமான ஓர் சூழ்நிலை இருந்து வந்தது, மாறி, ''சனியன்கள்'' என்று அவர் நம்மைக் கூறவும், ''எமக்கு இனித் தலைவரல்ல'' என்று நாம் அவரைக் கூறவுமான நிலை பிறந்ததென்றால், நெஞ்சு நெகிழாமலோ, நானாவிதமான கருத்துக்கள் கொந்தளித்தெழாமலோ, இருக்கமுடியாது. எல்லோரும் மனிதர் தானே! மனம், என்ன கல்லிப் பாண்டமா? பலப்பல, எண்ணங்கள், தோன்றத்தான் செய்யும். சம்பவம் அப்படிப் பட்டது; நிலைமை அவ்விதமானது.

எனினும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் துவக்கத்தைப் பற்றிய, 'முதல் சேதி' கிடைத்த உடன், இயற்கையாக ஏற்படக்கூடிய, முதல் எண்ணத்தை, விடுதலை வெளியிட்டது—''அவர்களுக்கு இது வெற்றிதான்—அவர்களுக்கு ஆதரவு இருக்கிறது—அவர்கள் இதைக்கொண்டு எவ்வளவோ சாதிக்கலாம்'' என்று தீட்டிற்று; பிறகு வெளிவரும் கருத்துகள், இயற்கையானவைகளல்ல - அவசியமான பிரசாரம், நிலைமையின் நிர்ப்பந்தத்தினால் கட்டப்படும் கற்பனைகள். நம்மால் அவைகளைப் புரிந்துகொள்ள முடிகிறது—இவைகளை நம்பியும் வாழவேண்டிய நிலை ஏற்பட்டதே ஆதீனத்துக்கு என்பதை எண்ணும்போது, சிறிதளவு இரக்கமும் உண்டாகிறது.

வசவு- சாபம்- சீண்டு முடிதல்- போலிக் கற்பனை-இவைகள் பிறகு, பொழியப்படுகின்றன வேதனையடைந்த உள்ளம்கொண்ட விடுதலையாரால். நாம், அவைகண்டு, பதறத் தேவையில்லை, ஏனெனில், முதலாவதாகவும் இயற்கையாக எழும்எண்ணத்துடனும், விடுதலை, திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு 'நல் வாழ்த்து'க் கூறியிருப்பது, நமக்கு, மகிழ்ச்சியையும்நம்பிக்கையையும் தருகிறது. இந்த நல்வாழ்த்தைப் பெற முடிந்ததே என்பதால் பூரிப்பும் அடைகிறோம்.

போதுமான வெற்றியேயாகும்

பொருளற்ற சொற்றொடரா அது! அல்ல! அல்ல! பொருளை அறியாமல் தீட்டப்பட்டதா? இராது, இராது! உள்ளத்திலிருந்து, உண்மை, கட்டுக்காவலை மீறி, வெளியே தாவி வந்து நின்றுவிட்டது, என்று கருதுகிறோம். போதுமான வெற்றிதான், ஐயமில்லை! திராவிட முன்னேற்றக் கழகத்தினைச் சார்ந்து பணியாற்றுவதென்று சூள் உரைத்துள்ள தோழர்களின் பட்டியலைப் பார்க்கும் போதும், அவர்களின் முன்னுள்ள செயலையும் இந்நாள உறுதியையும் கவனிக்கும்போதும், உண்மையில், விடுதலையின, நல வாழ்த்து;முககாலும உண்மை என்பது விளக்கமாகிறது.

ஒவ்வோர் மாவட்டத்திலும், நகரிலும், சிற்றூர்களிலும், எவரெவர் பெரியார் பெரும் படையின் முன்னணியினராக இருந்து வந்தனரோ, யாரார், எதிர்ப்புக்கிடையே வளர்ந்து, ஏளனத்துக்கிடையே தலைதூக்கி நின்று, மன வேதனையைத் தாங்கிக்கொண்டு, கொள்கையின் மாண்பினைக் காத்து வந்தனரோ, அவர்களிலே மிகப் பெரும்பான்மையினர், துவேஷத்துடன் அல்ல, பகையுணர்ச்சியுடன் அல்ல, அல்ப சந்தோஷத்துக்காக அல்ல, நேர்மைக்காக, நீதிக்காக, தன்மானத்துக்காக, தனியானதோர் அமைப்பைத் துவக்கிப் பணிபுரிவது என்ற நிலைமையை உண்டாக்க முடிந்ததென்றால், நிச்சயமாக, அது, விடுதலை கூறுவதுபோல, வெற்றிதான், போதுமான வெற்றிதான்—சந்தேகமில்லை.

'எங்கோ கிடந்ததுகள்'—'ஏதோ செய்யும்' அளவுக்கு முடிகிறதே.—வெற்றிதானே! 'அதுகளால்' வேண்டுமானால், சர்மாக்களிடம் சலலாபிக்கவோ, சீமான்களிடம் குலாவவோ,முடியாமற்போகலாம், எனினும், 'அதுகளுக்கும் ஒரு கூட்டம் இருக்கத்தானே செய்கிறது—என்று கேலி பேசும் போக்கு, பிறகு முளைக்கிறது விடுதலையாருக்கு. எனினும், முதலில், தூய்மையுடன் கிளம்பும் கருத்து, 'போதுமான வெற்றி' என்பதுதான்! மகிழ்ச்சி! நன்றி!

போதும், இந்த வெற்றி! வேதனைப்பட்ட உள்ளத்துக்கு ஒரு ஆறுதல் — சோர்வுற்ற தோழர்களுக்கு ஓர் உற்சாகம்—செயலற்ற நிலைக்கு ஓர் மாற்றம் — அழுத கண்களிலே, புதிய ஒளி--ஆர்வமுடையோருக்குப் புதியதோர் வாய்ப்பு—அணைவருக்கும் பணி புரிய அழைப்பு—இது போதும் — போதுமான வெற்றிதான், நமக்கு.

இதைக் கொண்டு, எவ்வளவோ சாதிக்கலாம், ஒழுங்கும் உண்மையும் உள்ளவர்கள், என்று விடுதலை கூறுவதையும் நாம் வரவேற்கிறோம். வழிகாட்டிச் சொற்களாகவே கொள்கிறோம். ஒழுங்கும் உண்மையும், எந்த அளவுக்கு ஆதீனத்திடமிருந்து பெற முடிந்ததோ, அந்த அளவு குறைந்துபடவில்லை—அந்தப் பண்புகள் வளராமலுமில்லை — எனவே, அந்தப் பண்புகளின்படியே ஒழுகி, கிடைத்துள்ள வெற்றியையும் நல்வாழ்த்தையும் துணையாகக்கொண்டு நாட்டிலே நாம், திராவிடர் கழகத்தின்பேரால் பரப்பிவந்த நற்கருத்துக்களை, முன்னைவிட வேகமாக, மேலும் சற்றுத் தெளிவாக, பரப்பும் பணியினைப் புரிவோம் என்று உறுதி கூறுகிறோம்.—அந்தப் பணி புரிய வருமாறு அன்பர்களை அழைக்கிறோம். திராவிடர் கழகம் தேர்தலில் ஈடுபடப்போவதில்லை—அந்தச் சமயத்திலே, திராவிட முன்னேற்றக் கழகம், நம்மை ஆதரிக்குமா, எதிர்க்குமா, என்று அஞ்ச! அறப்போர் புரிவது; அறிவு பரப்பும் பணி புரிவது. இவை தாமே, திராவிடர் கழகம் செய்யவேண்டிய பணி—இவையே தாம், முன்னேற்றக் கழகத்துக்கும் பணி, எனவே, இடையே, பகை எழக் காரணமில்லை—பகை வளர்ந்தால் ஒழியப் பலன் இல்லை என்று எண்ணும், இடந்தேடிகள் தவிர, மற்றவர்கள், கொள்கையிலே பற்றுக்கொண்டவர்கள், பழி சுமத்த, கேலி பேச, மூட்டிவிட, சூது மொழி புகல, பகைவளர்க்கக் காரணமில்லை.

திராவிட முன்னேற்றக் கழகம், 'இடந்தேடிகளிடம்,' திராவிடர் கழகம் சிக்கி, இந்தச் சீரழிவுப் பாதையில் செல்லக்கூடாது என்று விரும்புகிறது—தாய் வீடு கெட நினைக்கும் மகனுமில்லை, தந்தை தடுமாறித் தெருவில் விழ எண்ணும் மகன், தமிழ் மகனாகான். எனவே, திகைப்பும் துக்கமும், கைவிட்டுப் போய்விட்டதே என்ற கோபமும், பெரு நஷ்டம் வந்ததே இனி என்ன செய்வது என்ற பீதியும் ஏற்பட்டு, விடுதலை, அவ்வப்போது வீசும், கண்டனம், கேலி, சாபம், எனும் பல்வேறு சொல்லம்புகளிலே; இடையிடையே, பூத்திடும் நலவாழ்த்துகள், நம்பிக்கை தரும் உரைகள், ஆகியவற்றினை மட்டும், சற்று சிரமப்பட்டுத் தேடி எடுத்துப் போற்றி வரவேற்கும் காரியத்திலேயே, நாம் ஈடுபட எண்ணமேயன்றி, கோப மூட்டவும் பகை கிளப்பவும், பண்பற்ற முறையிலே,பாணங்கள் வீசப்படும்போது, அவைகளை எதிர்த்து மறுகணை விடும், பலனும் சுவையுமற்ற செயலில் ஈடுபடப்போவதில்லை

திராவிட முன்னேற்றக் கழகத்தின் துவக்கத்தினபோது, 'விடுதலை'யிடமிருந்து கிடைத்த நலவாழ்த்துக்கு நன்றி கூறி, அந்த ஏடு, எதிர்பார்த்து வாழ்த்தளித்தபடியே, கிடைத்துள்ளபோதுமான வெற்றியைக் கொண்டு தேவையான அளவிலும், முறையிலும், நாட்டுக்கும் திராவிட சமுதாயத்துக்கும் நலலறிவு பரப்பும் வகை செய்து வருவோம், என்று உறுதி கூறுகிறோம். வாழ்க வாய்மை! வளர்க, பண்பு!!

அறிவிப்பு

திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக் குழுவிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் உறுப்பினர்கள் தங்கள் தங்கள் முகவரிகளைத் தெரிவிக்க கோருகிறேன்.

பொதுச் செயலாளர்,
திராவிட முன்னேற்றக் கழகம்.
தலைமை நிலயம்,
7, பவழக்காரத் தெரு,
சென்னை-1.

சாதி ஒழிப்பு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

குஷ்ட நோய் மருத்துவ நூலோர் கூறுவர், குஷ்டம் தீராத நோய் என்று இருந்தாலும், அத்தீராநோய்க்கு மருந்து காண்மேற்கொள்ளும்முயற்சியில தளர்ச்சி காட்டுவது கிடையாது, ஜாதி குஷ்டநோய்க்கும், மருந்திட்டாக வேண்டும்—அதுவும் கடுமையான—காரசாரமான—முறைகளைக் கையாள வேண்டும், இல்லையேல் நோய் விரைவில குணமாகாது!

தோழர் பூவராகன் கூறுகிறார், இந்த ஜாதி குஷ்ட நோய்-'முத்திரை இல்லாமல போனால் எவ்வளவோ நாம் முன்னேற முடியும்' என்று. ஜாதி முத்திரை, முன்னேற்றத்தைத் தடுக்கக் கூடியது என்கிறார். ஆம்! தடுத்துத்தான் விட்டது—தடுத்துத்தான் வந்திருக்கிறது! மனித சமூக வளர்ச்சியைக் கெடுத்து வந்திருக்கிறது இந்த ஜாதி முத்திரை. ஜாதி முத்திரையின் இயல்பே, மக்கள் ஐக்கியத்தைக் குலைக்கும நச்சுத் தன்மை கொண்டது. இனி மக்கள் முன்னேறவேண்டுமோ ஜாதி முத்திரையைத் தொலைத்துத் தலை முழுக வேண்டும். அத்துடன் நின்றுவிடாமல், ஜாதி ஒழிப்புப் பிரசார பணி புரிய முன்வர வேண்டும். நமதுடையதல்ல இவ்வேண்டுகோள். தஞ்சை பூவராகன் சொற்களிலே மறைந்து கிடக்கும் முறையீடு!

''ஜனன மரண ரிஜிஸ்டரில் ஜாதி எழுதப்படும் வழக்கம் கைவிடப்பட வேண்டும்'' என்று, ஜாதி குஷ்ட நோய் தொலைவதற்கான, சாதனத்தையும் குறிப்பிடுகிறார் பூவராகன். அதுமட்டும் போதாது. ஜாதியைக்குறிக்கும் மதச்சின்னம்—முப்புரிநூல்-மூன்று மயிர் முடி-இவ்வளவும், மக்கள் பழக்க வழக்கத்திலிருந்து தொலைக்கப்படவேண்டும் சட்டத்தால்.ஜாதி குஷ்டநோயைப் பரப்பும் கடவுட் கதைகளை பள்ளி சிறுர்களுக்குப்போதிப்பதை நிறுத்த முயல வேண்டும். 'ஜாதி' என்ற வடசொல்லை சுட்டெரித்துச் சாம்பலாக்க வேண்டும். ஜாதி உயர்வு பேசுகிறவர்களுக்கு ஜன்ம தண்டனை தரவேண்டும்.

'ஜாதி'யைப் புகழ்ந்து கூறப்பட்டுள்ள நூற்களை, சர்க்கார் பறி முதல் செய்து, தீக்கிரையாக்க வேண்டும். 'ஆண்டவனை'யே உயர்ந்த ஜாதியாகக் குறிக்கப்பட்டிருக்கும் மத நூற்களை மக்கள் பார்வையிலிருந்து மறைத்தாக வேண்டுவதோடு, அதற்கான குறிகளுடன் செதுக்கப்பட்டுள்ள கற் கடவுள்களைக்காட்சி சாலைக்குக்கொண்டு வந்து மூடி போட்டு, மக்கள் கண்களில் படாமல் வைக்க வேண்டும். இவ்வளவும் செய்தால் ஜாதி குஷ்டம், முன்னேற்றத்தைக் கெடுத்துவரும் ஜாதி முத்திரை மக்கள் கருத்திலிருந்து தொலையும். வகுப்பு நீதிவழங்குவதை ஒழித்துக் கட்டுவதற்கு மட்டும் என்றே இத்தகு உபதேசங்கள் கிளம்புமானால், அது கண்டிக்கத்தக்கது என்போம்.

முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாக இருக்கும் மூல காரணத்தை நாம் கூறிவந்தபோது, ஜாதித் துவேஷம் பேசுகிறவர்கள் என்ற பட்டத்தைச் சூட்டி மகிழ்ந்த தர்மாத்மாக்களுக்கு, தோழர் பூவராகன் வாயுரையை அர்ப்பணிக்கிறோம் அகமகிழ்ச்சியோடு — அறிவு பெறட்டும் என்ற நல்ல நோக்கத்தோடு!